**செ.வெ.எண்: 47** **நாள்:18.02.2021**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் KMS 2020-2021 -ஆம் ஆண்டில் சம்பா சாகுபடி பருவத்தில் நடைபெறும் அறுவடையை முன்னிட்டு, விவசாயிகள் பயன்பெறும் வகையில், மூன்றாம் கட்டமாக அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், அழகியமணவாளன், குலமாணிக்கம், மஞ்சமேடு, கீழக்கொளத்தூர் கிராமங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், உடையார்பாளையம் வட்டம், விக்கிரமங்கலம், பிள்ளைப்பாளையம், தா.பழூர் கிராமங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், 24.02.2021 முதல் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அழகியமணவாளன், குலமாணிக்கம், மஞ்சமேடு, கீழக்கொளத்தூர், விக்கிரமங்கலம், பிள்ளைப்பாளையம் மற்றும் தா.பழூர் கிராமங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 24.02.2021 முதல் பயன்பாட்டிற்கு வர உள்ளது.

எனவே, அருகில் உள்ள விவசாயப் பெருமக்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை பயன்படுத்தி பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**